சென்னை முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள், சென்னை-08

ந. க.எண் 3453 /அ5/2024 நாள்5.6.2024

பொருள் பள்ளிக்கல்வி - சென்னை மாவட்டம் - போட்டித்தேர்வுகள் ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு I (தொகுதிI) பதவிகளுக்கான முதல்நிலை தேர்வு தேர்வு நாள் 13.07.2024 முற்பகல் தேர்வு நடத்த தேர்வுக்கூடங்கள் தெரிவு செய்து அனுப்புதல் சார்ந்து

பார்வை சென்னை-03 தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலரின் கடித 913/ID-c1 2024 நாள் 14.05.2024

பார்வையில் காணும் தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலரின் கடிதத்தின்படி ஒருங்கிணைந்த குடிமைப்பணிகள் தேர்வு தொகுதி I பதவிகளுக்கான முதல்நிலை தேர்வு 13.07.2024 முற்பகல் நடை பெறுகின்றன. நடை பெறும் தேர்வுக்கு தேர்வு கூடங்கள் தெரிவுசெய்து இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

தெரிவு செய்த தேர்வு கூடங்கள் தேர்வு நடைபெறும் நாளில் வேறு எந்த தேர்வும் நடை பெறுதல் கூடாது. தேர்வு அறைகள் போதுமானதாகவும், சுகாதாரமாகவும் இருத்தல் வேண்டும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றி தேர்வுகள் நடத்தப்படவேண்டும்

தேர்வர்களுக்கு தேவையான குடிதண்ணீர் வசதி கழிவறை வசதிகள் ஏற்படுத்தப் படவேண்டும் தடையற்ற மின்சார வசதி செய்து தரப்படவேண்டும். தேர்வுக்கூடங்கள் தேர்வர்கள் எண்ணிக்கை கூடுதல் தேவைபடின் மற்றும் தொலைபேசி எண் , கைபேசி எண், முதன்மைக்கண்காணிப்பாளர் மாற்றம் செய்யப்பட்டு இருந்தலோ அதன் விவரத்தை முதன்மைக்கல்வி அலுவலகத்திற்கு தெரிவிக்கப்படவேண்டும் என சார்ந்த பள்ளித்தலைமையாசிரியர்கள் / முதல்வர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு தேர்வுக்கூடங்களின் விவரம்

முதன்மைக் கல்வி அலுவலர்

சென்னை

பெறுநர்

1 அனைத்து தலைமையாசிரியர்கள் /முதல்வர்கள் / முதன்மைக்கண்காணிப்பாளர்

நகல்

2 மாவட்டக்கல்வி அலுவலர்கள் சென்னை மாவட்டம் தகவலுக்காகவும் தக்க நடவடிக்கை எடுக்கும் பொருட்டு அனுப்பப்படுகிறது.